# 4.5 ஒன்றிணைந்த நிறைவாழ்விற்கு திருவிவிலியம்



நமது வாழ்வை உயர்த்துவதற்கு பேருதவியாய் அமைந்த திருவிவிலியம் நமக்கு வழங்கப்பட்ட பேரொளி ஆகும். கடவுளின் திருவுள்ளத்தை அறிந்து கொள்வதற்கும் அவரின் விருப்பத்தை நிறைவேற்றவும் தேவையான வழி நடத்து தலை திருவிவிலியம் நமக்கு வழங்குகின்றது.

இப்பாடத்தில் இணைந்து வாழ்தல் என்னும் தலைப்பில் வேறுபாடுகளைக் களைந்து இசைவுடன் வாழ்வதற்கு திருவிவிலியம் எவ்வாறு துணைபுரிகிறது என்பதைக் கற்கப் போகிறோம்.

சமூகத்தில் ஏனையோருடன் உறவு கொள்ளும் போது எவ்வாறு நடந்து கொள்வது? அவ்உறவுகளை எவ்விதம் முன்னேற்றுவது? என்பதைக் காண முயல்வோம். ஒவ்வொரு தனிமனிதரும் அல்லது சமூகமும் தத்தமது தனித்துவங்களைப் பேணும் அதேவேளை பொதுமையை நோக்கி முன்னேறுவதற்கு திருவிவிலியம் நம்மை வழிநடத்துகிறது.



இலவச விநியோகத்திற்காக

> ''ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது;
> அது புத்துயிர் அளிக்கிறது.
> ஆண்டவரின் ஒழுங்குமுறை நம்பத்தக்கது.
> எளியவருக்கு அது ஞானம் அளிக்கின்றது''.
> (திருபாடல்கள் 19:7)

கடவுளுக்கும் மனிதருக்கும் இடையிலான உறவு மற்றும் மனிதர் தமது அயலாருடன் கொள்ளும் உறவுக்கும் அடைப்படையாக அமைவது அன்பாகும். ஆண்டவர் இயேசு இதைக் குறித்து கூறும்போது:

> "....நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்'' என்றார்.
> (யோவான் 13:34-35)

## சகவாழ்வுக்கான அடிப்படை

ஆண்டவர் இயேசு தமது திருப்பணியில் பல்வேறு சமூகக் கட்டுப்பாடுகளை தாண்டிச் செல்லுவதை நாம் காணலாம். ஆணாதிக்கம் நிறைந்த யூத சமூகத்தில் பெண்களின் சமத்துவம் சார்பாக ஆண்டவர் பல்வேறு செயல்பாடுகளை முன்வைத்தார். அவருடன் பல பெண்கள் இணைந்துப் பணியாற்றினர்.



வாசிக்கவும்

லூக் 8 : 1-3 வரை

யூதர்கள் ஏனைய சமூகத்தவரோடு உறவு கலப்பதில் நாட்டமில்லாதவராக இருந்தனர். அவ்விதம் உறவு கலக்கும்போது ஆண்டவரின் மக்கள் என்னும் தூய்மையை இழந்து போவதாக நம்பினர். இந்த சமூகப் பிரிவினையைத் தகர்ப்பவராக ஆண்டவரின் செயல்பாடு இருந்ததை அவரின் திருப்பணியில் நாம் காணலாம்.

## ஆண்டவர் இயேசுவும் சமாரியப் பெண்ணும்





வாசிக்கவும்

யோவான் 4 : 1-34

யூதர்கள் சமாரியா என்னும் நாட்டுக்குள் செல்வதில்லை. எருசலேமிலிருந்து கலிலேயாவுக்குப் போக நேரிட்டால் சமாரியாவுக் கூடாகவே செல்ல வேண்டும். இதைத் தவிர்ப்பதற்காக, போகும்போது யோர்தான் ஆற்றை இரு முறையும் திரும்பி வரும்போது இருமுறையும் கடக்கும் அளவுக்கு சமாரிய மக்கள் மீது வெறுப்பு உணர்வு கொண்டிருந்தனர். அவர்கள் யூதர்களாக இருப்பினும் அசீரிய நாட்டு படையெடுப்பால் கலப்பு இனமாக மாறிவிட்ட காரணத்தால் எருசலேமின் யூதர்கள் அவர்களைத் தள்ளி வைத்திருந்தனர். இந்தச் சமூகக் கட்டுப்பாட்டை உடைக்கும் முயற்சியாகவே ஆண்டவர் சமாரியாவுக்குள் சென்றதோடு, சமாரியப் பெண்ணோடும் உரையாடினார்.

## ஆண்டவர் இயேசு கெரசேனர் பகுதியில்




வாசிக்கவும்

மாற்கு 5 : 1-13

கெரசேனர் நாடு யூதரல்லாத பிற இன மக்கள் வாழ்ந்த பகுதியாகும். கடவுள் அனைத்து மக்கள் மீதும் அன்பாகவே இருக்கிறார் என்னும் செய்தியை ஆண்டவர் இயேசு நமக்கு வெளிப்படுத்தினார். அதன் வெளிப்பாடாகவே யூதர்கள் புறக்கணித்து வைத்த பிற இனமக்கள் வாழும் கெரசேனர் நாட்டுக்கு ஆண்டவர் சென்றதோடு, அங்கு பேய் பிடித்த ஓர் மனிதரை கல்லறைத் தோட்டத்தில் வைத்துக் குணமாக்கினார். யூதர்களுக்கு விலங்கு இனத்தில் பன்றிகள் வெறுக்கத் தக்கவையாகும். ஆனால் ஆண்டவர் இயேசு தான் பிறப்பில் ஒரு யூதராய் இருந்தும் தமது பன்னிரண்டு சீடர்களாகிய யூதர்களையும் அழைத்துக் கொண்டு, பன்றி வளர்ப்பதை வாழ்வாதாரமாகக் கொண்ட கெரனேசர் நாட்டு மக்களை காணச் சென்றார். இவை சகவாழ்வு அதியுச்ச சகிப்பு தன்மையைக் கொண்டது என்பதை நமக்கு எடுத்துக் காண்பிக்கிறது அல்லவா?



இலவச விநியோகத்திற்காக



"அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண்முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தன் சகோதரர் சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை".

(1 யோவான் 4 : 19-21)

## நீங்கள் அறிவீர்களா?

இலங்கை நாடு சமய நம்பிக்கை நிறைந்த ஒரு நாடு. நம் நாட்டில் பல்வேறு சமயத்தவர் வாழ்கின்றனர். கிறிஸ்தவராகிய நாம் நமது இறைநம்பிக்கையில் உறுதியாக இருப்பது போலவே ஏனைய சமயத்தவரும் அவரவர் நம்பிகையில் ஈடுபாடு காட்டி வருகின்றனர். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் பிற சமய மக்களை புண்படுத்தாது, கூடுமானவரை அவர்களுடன் இணைந்து வாழ்வது நமது கடமையாகும். சமூகக் கூட்டு வாழ்வில் ஒரு சமூகத்தின் உதவியின்றி இன்னொரு சமூகம் வாழமுடியாது என்பதை நினைவில் கொள்வது சிறப்பானதாகும். நாம் அன்றாட வாழ்வில் பயணம் செய்யும்போது பேருந்தை இயக்கும் ஓட்டுநர் வேறு சமயத்தவராக இருப்பதைக் காண்கிறோம் அல்லவா? உணவகங்களில் பிற சமூகத்தவர் சமைக்கும் உணவை உண்ண நேரிடுகின்றதல்லவா? வயலில் உழும் உழவர், கடலில் மீன் பிடிக்கும் மீனவர், தேயிலைத் தோட்டத்தின் தொழிலாளர்கள் மிகப் பெரிய பங்களிப்பை வழங்கும் நமது சக மனிதரல்லவா?

## நம்மால் முடியுமா?

- ஆண்டவர் நம்மை உப்புப் போல செயல்பட்டு சமூகத்திற்கு சுவையூட்ட அழைக்கிறார்.
- பிறர் நடுவில் விளக்கு போல ஒளியூட்ட நம்மை அழைக்கிறார்.
- பகைமை பாராட்டாது நல்ல சமாரியர் உவமைக்கு அமைய அன்பு காட்ட அழைக்கிறார்.




இலவச விநியோகத்திற்காக

## சக வாழ்வை நடைமுறைப்படுத்துவோம்

### பயிற்சி

1 உமது பள்ளியில் இயங்கும் ஏனைய சமய மன்ற நிகழ்ச்சிகளில் நீர் எவ்விதம் பங்களிப்புச் செய்வீர் என்பதையிட்டு ஒரு கட்டுரை எழுதவும்.

2 உமது பள்ளியின் 'கிறிஸ்து பிறப்பு' ஒளி விழாவின்பொழுது, ஏனைய சமய பள்ளித்தோழருக்கு எவ்விதமான பங்களிப்பை அளிக்க முன் வருவீர்?



"உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக! தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக் கொள்ளுங்கள்".

(உரோமையர் 12:9-10)


உடன் பிறப்புக்கள் போன்று ஒருவருக்கொருவர் உள்ளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களை விட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்.

சகோதரத்துவம் என்பது சமத்துவத்தின் அடிப்படையில் ஆனதாகும். நம்மோடு வாழும் பிறரை இரண்டாம் பட்சமாக நாம் நடத்த முன்வருவோமானால் அங்கு சகவாழ்வுக்கு இடமில்லாமல் போகும். எனவே சக வாழ்வு நோக்கி வளரும் நமது முயற்சியில் அனைவரையும் சமமாக நடத்த முன்வருதல் வேண்டும்.

அத்துடன் அனைவரையும் மதிப்பும் மரியாதையுடன் நடத்த முன் வரல்வேண்டும். பிறர் நம்மை விட உயர்ந்தோர் என்னும் உணர்வு நம்மில் வேரூன்ற வேண்டும். இவ்விதம் செயல்படுவதற்கு திருவிவிலியத்தின் உண்மைகள் நமக்கு பேருதவியாய் அமைகிறது.

ஆண்டவர் இயேசு வாழ்ந்த சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ளோரால் புறக்கணிக்கப்பட்ட ஏழை எளியோரை மற்றும் பாவியர் என இகழப்பட்டோரை ஆண்டவர் இயேசு அரவணைத்துச் செயல்பட்டது சகவாழ்வுக்கு சிறந்த முன் மாதிரியாகும். யூத சமூகத்தவரால் 'தீட்டு' என கணித்து புறம் ஒதுக்கப்பட்ட தொழுநோயாளரை ஆண்டவர் இயேசு பரிவுடன் தொட்டுக் குணமாக்கினார். சமூகத்தால் நடுத்தீர்க்கப்பட்ட பெண்களை அவர் மன்னித்தார். இவைகளை நிறைவேற்ற சமூகத்தில் நிலவிய பல்வேறு தடைகளை தகர்க்க வேண்டியத்

தேவை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு இருந்தது. இவைகளின் அடிப்படையில் பார்க்கும்போது நாம் எவரையும் குறைத்து மதிப்பிட முடியாது என்பது தெளிவாகின்றதல்லவா?



‘‘முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூயஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்’’


(எபேசியர் 4 : 2-3)

## விடையளிப்போம்

1. ‘சமத்துவம் என்னும் செயல்பாட்டுக்கு’ தடை மற்றும் அறைகூவல் எவ்விதம் ஏற்படுகிறது?
2. இது போன்ற அறை கூவல்களுக்கு ஆண்டவர் இயேசு எவ்விதம் முகம் கொடுத்தார் என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கவும்.

## ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்போம்

ஒருநாள் சீடர்கள் நடுவில் தம்மில் யார் பெரியவர் என்னும் விவாதம் ஏற்பட்டது. அப்பொழுது இயேசு, உங்களில் தலைவனாய் இருக்க விரும்புகிறவன் தொண்டனாய் இருக்கக் கடவன் என வலியுறுத்தினார். (மாற்கு 9:34-35)



“.....உங்கள் எல்லாரிலும் சிறியவரே பெரியவர் ஆவார்”.

(லூக்கா 9:48)



இலவச விநியோகத்திற்காக



வாசிக்கவும்

யோவான் 13 : 4 - 8

இந்நிகழ்வின் நிறைவில் ஆண்டவர் பின்வருமாறு கூறினார். உங்கள் ஆண்டவராகிய நானே உங்கள் கால்களைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டு இருக்கிறீர்கள்.

1 ஆண்டவர் இயேசு சீடர்களின் கால்களைக் கழுவிய நிகழ்ச்சியின் மூலம் வலியுறுத்தும் உண்மை என்ன?


2 ஒரு அரசாட்சியில் அரசனின் ஆட்சி அதிகாரத்தை அடையாளப்படுத்துபவை என்ன?
எடுத்துக் காட்டு
(அ) செங்கோல்
(ஆ) மகுடம்
(இ) .............
(ஈ) .............
(உ) .............

3 கால் கழுவும் நிகழ்ச்சியின் மூலம் ஆண்டவர் வலியுறுத்தியது என்ன?

4 பணிவிடையாற்றுவதன் அடையாளமாக அரச அதிகாரத்திற்கு மாற்றீடாக ஆண்டவர் முன்வைப்பன என்ன?
எடுத்துக் காட்டு
(அ) ஒரு பாத்திரத்தில் தண்ணீர்
(ஆ) இடையில் கட்டும் துண்டு
(இ) .........................................
(ஈ) .........................................
(உ) .........................................

## ஒருவரையொருவர் மன்னிப்போம்

மன்னிக்கும் மனப்பான்மை இல்லாதபோது குடும்ப வாழ்க்கை சிதைந்து போகும். அதுபோன்றே மன்னிக்கும் மனப்பான்மை இல்லாத ஓர் நாட்டில் குழப்பங்கள் அதிகரிக்கும். எனவே நாம் ஒருவரையொருவர் மன்னிக்க பழகுவோம்.



''ஒருவருக்கொருவர் நன்மைசெய்து பரிவு காட்டுங்கள்; கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்''.

(எபேசியர் 4 :32)


ஒருவரை ஒருவர் மன்னிக்கப் பழக வேண்டும் என்பதைக் குறித்து ஆண்டவர் ஒரு சிறப்பான உவமையைக் கூறினார் :



வாசிக்கவும்

மத்தேயு 18:21-35

## மன்னிப்பைக் குறித்து திருத்தூதர் பவுலின் கூற்று



''சகோதர சகோதரிகளே, ஒருவர் ஏதேனும் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டால் தூய ஆவியைப் பெற்றிருக்கும் நீங்கள் கனிந்த உள்ளத்தோடு அவரைத் திருத்துங்கள்; அவரைப்போல் நீங்கள் சோதனைக்கு உள்ளா காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்''.

(கலாத்தியர் 6:1)


இவ்விதம் சகவாழ்வு குறித்து திருமறை நமக்கு பல்வேறு எடுத்துக் காட்டுக்களை தந்து உதவுகின்றது. இவை எல்லாவற்றையும் நிறைவேற்ற கிறிஸ்தவ அன்பே நமக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.



இலவச விநியோகத்திற்காக

## நம்மை நாமே ஆய்வு செய்வோம்

## கிறிஸ்தவ வாழ்வின் கொள்கைகள்



உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக! தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக் கொள்ளுங்கள். உடன் பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள். விடாமுயற்சியோடும் ஆர்வம் மிக்க உள்ளத்தோடும் ஆண்டவருக்குப் பணிபுரியுங்கள். எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள். துன்பத்தில் தளராத மனத்துடன் இருங்கள்; இறை வேண்டலில் நிலைத்திருங்கள். வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாய் இருங்கள்.

உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள். ஆம் ஆசி கூறுங்கள்; சபிக்க வேண்டாம். மகிழ்வோரோடு மகிழுங்கள். அழுவாரோடு அழுங்கள். நீங்கள் ஒரு மனத்தவராய் இருங்கள்: உயர்ந்த மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள். நீங்கள் உங்களையே அறிவாளிகளெனக் கருதிப் பெருமிதம் கொள்ள வேண்டாம்.

தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள். எல்லா மனிதரும் நலமெனக் கருதுவதை பற்றியே எண்ணுங்கள். இயலுமானால், உங்களால் முடிந்தவரை எல்லோரோடும் அமையுதியுடன் வாழுங்கள். அன்பார்ந் தவர்களே! பழிவாங்காதீர்கள்; அதைக் கடவுளின் சினத்திற்கு விட்டு விடுங்கள். ஏனெனில் மறை நூலில் எழுதியுள்ளவாறு :

“பழிவாங்குவதும் கைம்மாறு அளிப்பதும்
எனக்கு உரியன” என்கிறார் ஆண்டவர்.
நீயோ “உன் எதிரி பசியாய் இருந்தால், அவனுக்கு
உணவு கொடு. அவன் தாகத்தோடு இருந்தால்,
அவனுக்குக் குடிக்கக் கொடு. இவ்வாறு செய்வதால்,
அவன் தலைமேல் எரிதழலைக் குவிப்பாய்.”
தீமை உங்களை வெல்லவிடாதீர்கள்; நன்மையால் தீமையை வெல்லுங்கள்.

(உரோமையர் 12: 9-21)

## செயல்பாடு

1. *வாழ்வு தொடர்பான ஓர் மதிப்பீட்டைச் செய்யவும்*

2. *சக வாழ்விற்கு ஆண்டவர் முன்வைத்த மாதிரியை அட்டவணைப்படுத்தவும்.*

3. *இனம், மொழி, சமயம் ஆகியவற்றுக்கு இடையிலான சகவாழ்வு தொடர்பாக திருவிவிலியம் எவ்விதம் உதவும் என ஒரு மடல் எழுதவும்*

4. *மேற்காணும் திருவிவிலியப் பாடத்தை வாசித்து அதிலிருந்து சில கருத்துக்களை அட்டவணைப்படுத்துக.*